செ.வெ.எண்.12 நாள்: 07.05.2019

**தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தூத்துக்குடி வட்டாரத்தில் பயன்படுத்தப்படும் பள்ளி வாகனங்களின் தரத்தினை போக்குவரத்து அலுவலர்கள் ஆய்வு செய்வதை பார்வையிட்டார்.**

---

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தூத்துக்குடி வட்டாரத்தில் பயன்படுத்தப்படும் பள்ளி வாகனங்களின் தரத்தினை போக்குவரத்து அலுவலர்கள் ஆய்வு செய்வதை இன்று (07.05.2019) பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு மோட்டார் வாகனம் பள்ளி வாகனங்களுக்கான கட்டுப்பாடு மற்றும் சிறப்பு விதிகள் 2012-ன் படி, ஆண்டுக்கு ஒருமுறை அனைத்து பள்ளி வாகனங்களும் பொதுச்சாலையில் இயக்க பாதுகாப்பாக உள்ளதா என மேற்பார்வை அலுவலர் மற்றும் குழு உறுப்பினர்கள் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தூத்துக்குடி வட்டாரத்தில் பயன்படுத்தப்படும் பள்ளி வாகனங்களின் தரத்தினை போக்குவரத்து அலுவலர்கள் மோட்டர் வாகன ஆய்வாளர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளனர். குறிப்பாக வாகனத்தின் **Body** உறுதி மற்றும் பாதுகாப்பு, வாகனத்தின் வழி மற்றும் கதவுகள் சரிவர பொறுத்தப்பட்டுள்ளதா எனவும், படிக்கட்டுகள் மாணவர்கள் ஏறி இறங்கும் வசதி உள்ளதா எனவும், ஓட்டுநர் கேபின் தனியாக பிரிக்கப்பட்டுள்ளதா என்பதையும், இருக்கைகள் உறுதியாக பிணைக்கப்பட்டுள்ளதா எனவும், புத்தகப்பை வைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா எனவும், வாகனத்தின் தரைப்பலகை நிலைத்தன்மை எவ்வாறு உள்ளது எனவும், ஜன்னல்களில் பாதுகாப்பு கம்பி அமைக்கப்பட்டுள்ளதா எனவும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், அவசரகால வழி

உரிய முறையில் பொறுத்தப்பட்டு இயங்கும் நிலையில் உள்ளதா எனவும், முதலுதவிப்பெட்டியில் உரிய மருந்துகள் காலாவதி ஆகாமல் உள்ளதா எனவும், அனைத்து வாகனங்களிலும் தீயணைப்புக்கருவி பொறுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆய்வு செய்யப்படுகிறது.

தூத்துக்குடி வட்டாரப்போக்குரத்து அலுவலகத்தின் மூலம் 171 பள்ளி வாகனங்களை ஆய்வு செய்ய அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இன்று 91 வாகனங்கள் ஆய்வுக்கு வந்துள்ளன. தமிழ்நாடு மோட்டார் வாகனம் பள்ளி வாகனங்களுக்கான கட்டுப்பாடு மற்றும் சிறப்பு விதிகள் 2012-ன் படி, அனைத்து வாகனங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு தகுதியான வாகனங்கள் மட்டும் தொடர்ந்து இயக்க அனுமதிக்கப்படும். குறைப்பாடுகள் கண்டறியப்பட்ட வாகனங்களுக்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும். அதற்குள் குறைபாடுகள் சரிசெய்யப்பட்டால் மீண்டும் அந்த வாகனம் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். திருச்செந்தூர் வட்டாரத்தில் 156 பள்ளி வாகனங்களை ஆய்வு செய்ய அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இதில் 126 வாகனங்களும், கோவில்பட்டி வட்டாரத்தில் 195 வாகனங்களில் 186 வாகனங்களும் ஆய்வு செய்யப்பட்டது. பள்ளி திறக்கப்படும் முன் அனைத்து வாகனங்களும் ஆய்வு செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., முதன்மை கல்வி அலுவலர் திரு.முருகேசன், தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மண்ணர்மண்ணன் மற்றும் அலுவலர்கள் உடன்இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.